பெயர்: ............................ தேதி: ............................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_2

**சான்று:-** விரைவாகத் தாவும் பூச்சி வெட்டுக்கிளி.

- [x] விரைவாகத் தாவும் பூச்சி எது?
- [ ] விரைவாகத் தாவும் பூச்சிகள் எத்தனை?
- [ ] விரைவாகத் தாவும் பூச்சி எங்கே?

1. கல்லீரலின் நிறம் கருஞ்சிவப்பு.

- [ ] கல்லீரலின் நிறம் என்ன?
- [ ] கல்லீரலின் நிறம் எவ்வளவு?
- [ ] கல்லீரலின் நிறம் எத்தனை?

2. மண்பானை செய்பவர் குயவர்.

- [ ] மண்பானை செய்பவர்கள் எத்தனை பேர் ?
- [ ] மண்பானை செய்பவர் எங்கே?
- [ ] மண்பானை செய்பவர் யார்?

3. கண்ணின் குறைபாடுகள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை.

- [ ] கண்ணின் குறைபாடுகள் எத்தனை?
- [ ] கண்ணின் குறைபாடுகள் எவை?
- [ ] கண்ணின் குறைபாடுகளை விவரி?

4. ஆற்றைத் தடுத்து அமைக்கப்படுவது அணை.

- [ ] அணைகளைப் பற்றிக் கூறுக.
- [ ] ஆற்றைத் தடுத்து அமைக்கப்படுபவை எவை எவை?
- [ ] ஆற்றைத் தடுத்து அமைக்கப்படுவது என்ன?

பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. இந்திய தேசிய கீதத்தை இயற்றியவர் இரவீந்திரநாத் தாகூர்.
   - ☐ இந்திய தேசிய கீதத்தை இயற்றியது எப்பொழுது?
   - ☐ இந்திய தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
   - ☐ இந்திய தேசிய கீதத்தை இயற்றியவர் எத்தனை பேர்?
2. தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்கள் முப்பத்தி இரண்டு.
   - ☐ தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
   - ☐ தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்கள் எவை எவை?
   - ☐ தமிழ் நாட்டில் உள்ள மாவட்டம் எது?
3. முக்கனிகள்- மா, பலா, வாழை.
   - ☐ முக்கனிகள் யாவை ?
   - ☐ முக்கனிகள் எத்தனை?
   - ☐ மாம்பழம் முக்கனியா?
4. ஒரு வருடத்திற்கு பன்னிரெண்டு மாதங்கள்.
   - ☐ ஒரு வருடத்திற்கு எத்தனை மாதங்கள்?
   - ☐ பன்னிரெண்டு மாதங்கள் சேர்ந்தது எது?
   - ☐ ஒரு வருடத்திற்கு ஆறு மாதங்களா?
5. பெண்கள் கைகளில் அணிவது வளையல்.
   - ☐ பெண்கள் கைகளில் அணிவது எது?
   - ☐ பெண்கள் கைகளில் எத்தனை அணிகலன்களை அணிவர்?
   - ☐ பெண்கள் விரல்களில் அணிவது எது?